(பத்தாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

**இல. 163.]**

# பாராளுமன்றத்தின் ஒழுங்குப் பத்திரம்

## 2026 ஜூலை 09, வியாழக்கிழமை, மு.ப. 9.30 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

1543/2025

கௌரவ (கலாநிதி) நந்தன மில்லகல,— போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) கேகாலை மாவட்டத்தில் யட்டியாந்தோட்டையிலிருந்து சீபோத், நாகஸ்தென்ன ஊடாக நாவலப்பிட்டி வரை செல்லும் வீதி சுமார் 20 வருடங்களாக புனரமைக்கப்படாமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(ii) கொழும்பிலிருந்து நாவலப்பிட்டி வரையான மாற்று வீதியாக மேற்படி வீதியைப் பயன்படுத்தலாம் என்பதை அறிவாரா என்பதையும்;

(iii) மேற்படி வீதியின் 9ஆவது கிலோ மீட்டரிலிருந்து அபிவிருத்தி செய்வதற்கு வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் திட்டமிடப்பட்டிருந்ததா என்பதையும்;

(iv) அதற்காக ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவு என்பதையும்;

(v) அந்த அபிவிருத்தி பணிகள் முறையாக இடம்பெற்றுள்ளனவா என்பதையும்;

(vi) அதன்போது முறையான பெறுகை வழிமுறைகள் பின்பற்றப்பட்டுள்ளனவா என்பதையும்;

(vii) மேற்படி வீதியின் அபிவிருத்தி பணிகள் துரிதமாக முன்னெடுக்கப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2.

1642/2025

கௌரவ இம்ரான் மகரூப்,— இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையிலுள்ள சர்வதேச கிரிக்கெட் மைதானங்களின் எண்ணிக்கை மாகாண வாரியாக வெவ்வேறாக யாது;

(ii) வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் எதிர்காலத்தில் புதிய கிரிக்கெட் மைதானங்களை நிர்மாணிக்கத் திட்டமிடப்பட்டுள்ளதா;

(iii) ஆமெனில், மேற்படி மைதானங்களை நிர்மாணிக்கத் திட்டமிடப்பட்டுள்ள பிரதேசங்கள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் திறமையான கிரிக்கெட் வீரர்கள் உள்ளார்கள் என்பதை அறிவாரா;

(ii) ஆமெனில், அவர்களை இனங்கண்டு தேசிய அணியில் இணைத்துக் கொள்வதற்குள்ள வேலைத்திட்டம் யாது;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3.

1740/2025

கௌரவ எம்.எஸ். அப்துல் வாசித்,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2004.12.26 ஆம் திகதி ஏற்பட்ட சுனாமி பேரழிவின் காரணமாக பொத்துவில் பிரதேச செயலகப் பிரிவில் பாதிக்கப்பட்ட மக்கள் வீடுகளை இழந்தார்கள் என்பதையும்;

(ii) மேற்படி மக்களுக்கு அரசாங்கத்தினாலும் அரச சார்பற்ற அமைப்புக்களினாலும் தனியார் காணிகளில் மற்றும் அரச காணிகளில் மாற்று வீடுகள் நிர்மாணித்து கொடுக்கப்பட்டுள்ளன என்பதையும்;

(iii) மேற்படி மாற்று வீடுகள் சர்வோதயபுரம், செங்காமம், ஹிஜ்ரா நகர், கனகர் கிராமம், கோமாரி 1 மற்றும் கோமாரி 2 ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் உள்ள அரச காணிகளில் நிர்மாணிக்கப்பட்டுள்ளன என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) 18 வருடங்களைக் கடந்துள்ள போதிலும் இதுவரையில் அந்த மக்களுக்கு உரிய காணிகளுக்கான உறுதிகள் வழங்கப்படாதுள்ளமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி மக்களுக்கு துரிதமாக காணி உறுதிகளை வழங்குவதற்கு எடுத்துள்ள அல்லது எதிர்காலத்தில் எடுக்கப்படவுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4.

1789/2025

கௌரவ பீ. ஆரியவங்ச,— பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சரிடம் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இரத்தினபுரி மாவட்டத்தில் உள்ள தோட்டக் கிராமங்களின் எண்ணிக்கை யாது;

(ii) அவற்றின் பெயர்கள் யாவை;

(iii) மேற்படி தோட்டக் கிராமங்களில் வாழும் குடும்பங்களின் எண்ணிக்கை கிராமங்கள் வாரியாக வெவ்வேறாக யாது;

(iv) அந்த கிராமங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கு எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5.

1888/2026

கௌரவ அபூபக்கர் ஆதம்பாவா,— பொதுநிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பொலிவேரியன் கிராமத்தில் அமைந்துள்ள EHED சுனாமி மீள்குடியேற்றல், இஸ்லாமாபாத் மற்றும் பெரியநீலாவணை ஆகிய வீடமைப்புத் திட்டங்கள் மிக மோசமான நிலையில் இருப்பதுடன், அங்கு அடிப்படை வசதிகளும் செயலிழந்த நிலையில் காணப்படுவதால் குடியிருப்பாளர்கள் பெருஞ்சிரமங்களை எதிர் கொண்டுள்ளனர் என்பதையும்;

(ii) தொடர்ச்சியாக ஏற்படுகின்ற வெள்ளம் காரணமாக தேங்கி நிற்கும் நீர், கழிப்பறை மற்றும் கழிவு நீர் கட்டமைப்புடன் கலப்பதால் நுளம்புப் பெருக்கம் மற்றும் நோய்கள் பரவுதல் உட்பட பல சுகாதாரச் சீர்கேடுகள் ஏற்பட்டுள்ளன என்பதையும்;

(iii) அதன் காரணமாக வயோதிபர்கள், பெண்கள், பிள்ளைகள் மற்றும் நோயாளிகள் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பதையும்;

(iv) மேற்படி வீடமைப்புத் திட்டங்களில் இயங்கிய கூட்டு ஆதனக் குழுக்கள் நீண்டகாலமாக செயலிழந்து காணப்படுகின்றன என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி வீடமைப்புத் திட்டங்களில் நிலவும் சுகாதார, வடிகாலமைப்பு மற்றும் வெள்ளநீர் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு மேற்கொள்ளப்படும் துரித நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி வீடமைப்புத் திட்டங்களை மீள்நிர்மாணிப்பதற்காக அல்லது மீளக் கட்டியெழுப்புவதற்காக நடைமுறை ரீதியான மற்றும் நிலையான தீர்வொன்றை நடைமுறைப்படுத்துவதற்கு முன்மொழியப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், அதற்கான உத்தேச காலப்பகுதி யாதென்பதையும்;

(iv) தற்போது செயலிழந்த நிலையில் காணப்படும் கூட்டு ஆதனக் குழுக்களை செயற்படுத்துவதற்கு எடுக்கும் காலப்பகுதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

6.

1906/2026

கௌரவ ஆர்.ஜீ. விஜேரத்ன,— புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஹங்குரன்கெத்த பிரதேச செயலகப் பிரிவின் பல்லேமளுவ கிராம அலுவலர் பிரிவில் 43 குடும்பங்கள் வசித்துவரும் பிரதேசமானது தொல்பொருள் பாதுகாப்பு வலயமாக வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது என்பதை அறிவாரா என்பதையும்;

(ii) அதன் காரணமாக அப்பிரதேச மக்களின் இயல்பு வாழ்க்கையில் தடைகள் ஏற்பட்டுள்ளதென்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(iii) புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் இணக்கம் கிடைக்காமையின் காரணமாக மேற்படி காணிகளுக்கு காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவினால் உறுதிகள் வழங்கப்படுவது தாமதமாகியுள்ளது என்பதை அறிவாரா என்பதையும்;

(iv) இந்த விடயம் தொடர்பாக ஏதேனும் நிவாரண நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

7.

1940/2026

கௌரவ தர்மப்பிரிய திசாநாயக்க,— வீடமைப்பு, நிர்மாணிப்பு மற்றும் நீர்வழங்கல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சமுதாய நீர்வழங்கல் கருத்திட்டங்களைச் செயற்படுத்துவதற்கு பின்பற்றப்படும் முறைமை யாது என்பதையும்;

(ii) மேற்படி கருத்திட்டங்களை ஆரம்பிக்கும் போது அரசாங்கத்தின் தலையீடும் கிராமிய சமுதாயப் பங்களிப்பும் யாது என்பதையும்;

(iii) மேற்படி கருத்திட்டங்களை முன்னெடுக்கும் சமுதாய நீர்க் குழுக்களின்/ சங்கங்களின் கட்டமைப்பும் பொறுப்பும் யாதென்பதையும்;

(iv) மேற்படி கருத்திட்டங்களில் பிரதேச செயலகங்கள் மற்றும் உள்ளூர் அதிகார சபைகள் உள்ளிட்ட அரச நிறுவனங்கள் தலையீடுசெய்வதற்கான ஒரு முறைமை காணப்படுகின்றதா என்பதையும்;

(v) இன்றேல், அதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) சமுதாய நீர்க் கருத்திட்டங்களின் ஒழுங்குறுத்துகைக்கும் கணக்காய்விற்கும் பயன்படுத்தப்படும் முறைமை யாதென்பதையும்;

(ii) இதுவரை மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுகளின் மூலம் அறியக் கிடைத்த விடயங்கள் தொடர்பில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iii) ஆமெனில், மேற்படி நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

8.

2025/2026

கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா,— சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வதிவிட விசாக்களில் இலங்கைக்கு வருகை தரும் வெளிநாட்டவர்களின் சுகாதார நிலையை மதிப்பிடுவதற்கு, 2018/2019 ஆம் ஆண்டுகளில் புலம்பெயர்தலிற்கான சர்வதேச அமைப்பினால் சர்வதேச சுகாதார மதிப்பீட்டு நிலையம் தாபிக்கப்பட்டது என்பதையும்;

(ii) ஆரம்ப தாபிப்புச் செலவுகளை மீளப்பெற்றதன் பின்னர், குறிப்பிடப்பட்ட நிலையம் சுகாதார அமைச்சினால் பொறுப்பேற்கப்படும் என்ற புரிந்துணர்வின் அடிப்படையில் அது தாபிக்கப்பட்டது என்பதையும்;

(iii) கொவிட்-19 பெருந்தொற்று இந்தப் பொறுப்பேற்கும் செயன்முறையை தாமதமடையச் செய்தது என்பதையும்;

(iv) 2025 மற்றும் 2026 ஆம் ஆண்டுகளில் சர்வதேச சுகாதார மதிப்பீட்டு நிலையத்தினைப் பொறுப்பேற்பதற்கான உத்தரவாதங்கள் வழங்கப்பட்ட போதிலும், அது தொடர்பில் எந்தவித முன்னேற்றமும் இடம்பெற்றதாகத் தெரியவில்லை என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) சர்வதேச சுகாதார மதிப்பீட்டு நிலையம் தொடர்பான பொறுப்பேற்றலுக்காக சுகாதார அமைச்சிடம் தெளிவான திட்டம் மற்றும் காலச் சட்டகம் ஒன்று காணப்படுகிறதா என்பதையும்;

(ii) குறிப்பிடப்பட்ட நிலையத்தின் ஊடாக ஈட்டப்படும் வருடாந்த வருமானத்தை அமைச்சு கைவிடுவதற்கு உத்தேசித்துள்ளதா என்பதையும்;

(iii) அமைச்சினால் பெறப்பட்ட 15% வருமானப் பங்கு இதுவரையில் பயன்படுத்தப்பட்ட விதம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல் ஏன்?

9.

2035/2026

கௌரவ சுனில் ராஜபக்ஷ,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை ஆசிரிய ஆலோசகர் சேவைக்கான சேவைப் பிரமாணமொன்று நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) மேற்படி சேவைப் பிரமாணத்தின்படி பதவிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) மேற்படி சேவைப் பிரமாணத்தின்படி ஆசிரிய ஆலோசகர்களின் பணிப்பொறுப்புக்கள் யாவையென்பதையும்;

(iv) புதிய கல்வி மறுசீரமைப்பை நடைமுறைப்படுத்துகையில் ஆசிரிய ஆலோசகர் களுக்கு விஷேட பணிப்பொறுப்பு கையளிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) ஆசிரிய ஆலோசகர் சேவையில் நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கை, ஒவ்வொரு மாகாணம் மற்றும் பாடத்திற்கும் ஏற்ப வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) ஆசிரிய ஆலோசகர் சேவையில் வெற்றிடங்கள் காணப்படும் நிலையில், குறிப்பிட்ட கடமைகளை நிறைவேற்றுவதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள வேலைத்திட்டம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

10.

2052/2026

கௌரவ சட்டத்தரணி அனுராத ஜயரத்ன,— போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கொழும்பிலிருந்து கண்டி மற்றும் நாவலப்பிட்டி வரை தற்போது புகையிரத போக்குவரத்து இடம்பெறுவதில்லை என்பதை அவர் அறிவாரா;

(ii) ‘தித்வா’ சூறாவளி காரணமாக அப்புகையிரத வீதியில் சேதமடைந்த இடங்களின் எண்ணிக்கை யாது;

(iii) மேற்படி அடையாளம் காணப்பட்டுள்ள இடங்களில், சேத மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டுள்ள இடங்களின் எண்ணிக்கை யாது;

(iv) மேற்படி சேதங்கள் தொடர்பில் இதுவரை எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை;

(v) அனர்த்தத்திற்குள்ளான அனைத்து இடங்களையும் புனரமைத்து அபிவிருத்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்படும் காலப்பகுதி யாது;

(vi) 06 மாத காலத்திற்குள் அப்புகையிரத வீதியைப் புனரமைத்து கண்டி வரை புகையிரத போக்குவரத்தை மீண்டும் ஆரம்பிக்க முடியுமா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## பிரேரணை முன்னறிவித்தல்கள்

கௌரவ ஜீ.ஜீ. பொன்னம்பலம்,— சட்டமூலம் கொண்டுவர அனுமதி,— பின்வரும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக :-

“1999 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, இலங்கை கல்வாரி தேவஸ்தானம் (கூட்டிணைத்தல்) சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்”

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*1.

பணம் தூய்தாக்கல் தடை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*2.

நிதிசார் கொடுக்கல்வாங்கல்களை அறிக்கையிடல் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*3.

பயங்கரவாதி நிதியளிப்பை ஒடுக்குதல் மீதான சமவாய (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*4.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற நிலையியற் கட்டளைகளின் கீழான தீர்மானம் (இல. 1),— "வெளிநாட்டுப் பணமனுப்பல்களின் பிரகாரம், வெளிநாடுகளில் பணிபுரிகின்ற இலங்கையர்களுக்கு முழுமையாக மின்சாரத்தில் இயங்கும் வாகனங்களை இறக்குமதி செய்ய அனுமதிப்பத்திரம் வழங்குவதற்குரியதாக 2022 மே 01 ஆம் திகதி தொடக்கம் 2023 செப்தெம்பர் 15 ஆம் திகதி வரை அமுல்படுத்தப்பட்ட உத்தேச திட்டம்" தொடர்பாக அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவினால் 2025.04.02 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட விசாரணை தொடர்பான தகவல்கள் உள்ளடக்கப்பட்டதும், 2025 ஒக்டோபர் 24 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டதுமான பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் 318 எனும் இலக்கத்தைக் கொண்ட அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவின் அறிக்கையானது, பாராளுமன்ற நிலையியற் கட்டளை 119(4) இன் ஏற்பாடு களுக்கமைய சட்டத்துறை தலைமையதிபதியின் அவதானிப்புக்கள் மற்றும் தேவையான நடவடிக்கைகளுக்காக ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

*5.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற நிலையியற் கட்டளைகளின் கீழான தீர்மானம் (இல. 2),— அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவினால் குறித்த நிறுவனங்கள் தொடர்பாக அக் குழுக்கூட்டங்களில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் சபையாவணப்படுத்தப்பட்ட பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர்களில் உள்ளடக்கப்பட்ட அறிக்கைகள் ஊடாக இனங்காணப்பட்ட பின்வரும் இணைப்புகளில் குறிப்பிடப்படுகின்ற சம்பவங்கள் பாராளுமன்றத்தின் நிலையியற் கட்டளைகள் 120(4) இன் ஏற்பாடுகளுக்கு அமைவாக உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது:-

**இணைப்பு:**

| தொடர் இலக்கம் | நிறுவனம் | குழுக்கூட்டம் நடாத்தப்பட்ட திகதி | அறிக்கை சபைக்கு சமர்ப்பிக்கப்பட்ட திகதி மற்றும் பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம் | குறிப்பிட்ட சம்பவம்/ சம்பவங்கள் |
|---|---|---|---|---|
| 1. | தேசிய இரத்தினக் கல் மற்றும் ஆபரண அதிகாரசபை | 2025.03.05 மற்றும் 2025.03.27 | 2025.06.04 PS 212 | 1. 510 கிலோ கிராம் நிறையுடைய Rough Sapphire Cluster மாணிக்கக்கல். |
| | | | | 2. ஹெரணியாவக்க மாணிக்கக்கல் படிவுகளை அகற்றிக்கொள்வதற்கான கருத்திட்டம். |
| | | | | 3. தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபைக்கு கட்டிடமொன்றை வாடகைக்குப் பெற்றுக் கொள்ளல். |
| 2. | ஸ்ரீஜயவர்தனபுர பொது வைத்தியசாலை சபை | 2025.05.15 | 2025.07.24 PS 242 | 1. மின்சாரக் கட்டமைப்பின் பாதுகாப்புக்குத் தருவிக்கப்பட்ட சாதனங்களை பிரதான கட்டமைப்புடன் இணைத்தல். |
| | | | | 2. கொடுப்பனவுகளை மேற்கொள்வதிலுள்ள முறைகேடுகள் மற்றும் ஆட்சேர்ப்பு நடைமுறைகள். |
| | | | | 3. முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரமின்றி பதவிகளுக்கு ஆட்சேர்த்தல் |

| | | | | |
|---|---|---|---|---|
| 3. | காணிச் சீர்திருத்த ஆணைக்குழு | 2025.05.08 மற்றும் 2025.07.17 | 2025.12.18 PS 391 | 1. காணிச் சீர்திருத்த ஆணைக்குழு நிதியிலிருந்து சேதனப் பசளைத் திட்டத்திற்கு பணம் செலவிடுதல் |
| | | | | 2. திரு. எஸ்.ஆர். ரெங்கனாதனுக்கு காணி வழங்குதல் (மாத்தளை பேகுரூப் தோட்டம்). |
| | | | | 3. திருமதி. மாலினீ நாணயக்காரவுக்கு காணி வழங்குதல் (இம்புல்கஸ்வாடிய, கட்டான) |
| | | | | 4. காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவின் ஊழியர்களுக்கு காணிகளை வழங்குதல். |
| 4. | இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகம் | 2025.06.04 | 2025.12.18 PS 392 | 1. பல்கலைக்கழகத்தில் புதிய நூலகக் கட்டிடத்தை நிர்மாணித்தல். |
| | | | | 2. பல்கலைக்கழக பணியாட்டொகுதிக்கு வீடமைப்புத் தொகுதியொன்றை நிர்மாணிக்கும் போது இடம்பெற்ற முறைகேடுகள். |
| | | | | 3. 2021ஆம் ஆண்டில் தொழிநுட்ப பீடத்திற்கு நூலக புத்தகங்கள் கொள்வனவு செய்தல். |
| | | | | 4. பல்கலைக்கழக வளாகத்தில் அனுமதியின்றி மண் வெட்டுதல். |
| | | | | 5. உப வேந்தருக்குச் சொந்தமான வீடொன்றினை குத்தகை அடிப்படையில் மாணவர் விடுதிக்காக வழங்குதல். |
| 5. | இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை | 2025.08.20 | 2025.12.18 PS 394 | 1. வீரவில சுற்றுலா பங்களாவைப் புனரமைத்தல். |

| | | | | |
|---|---|---|---|---|
| 6. | லங்கா சதொச லிமிடட் | 2025.10.10 | 2025.12.18 PS 397 | 1. ஊழியர்களின் ஊக்குவிப்புக் கொடுப்பனவுகள் செலுத்தல். |
| | | | | 2. கிளிநொச்சி நகரத்தில் அமைந்துள்ள நிறுவனத்திற்கு உரித்தான 15000 சதுர அடி கட்டிடத்தை குத்தகை அடிப்படையில் வழங்குதல். |
| | | | | 3. செயலாற்றுகை கொடுப்பனவு மற்றும் தொழில்சார் கொடுப்பனவுகள். |
| | | | | 4. போக்குவரத்துக் கொடுப்பனவுகள். |
| 7. | இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப் புப் பணியகம் | 2025.02.27 மற்றும் 2025.05.23 | 2026.01.08 PS 435 | 1. வதிவிட பயிற்சிகள் வழங்கப்படாமல் வீட்டுப் பணிப் பெண்களை வெளிநாடு களுக்கு அனுப்புவதால் பணியகத்திற்கு நட்டம் ஏற்படுதல். |
| | | | | 2. வெளிநாட்டுத் தூதரகங்களுக்கு உத்தியோகத்தர்களை நியமித்தல். |
| | | | | 3. Glocal Fair (ஜயகமு ஸ்ரீ லங்கா) நிகழ்ச்சித்திட்டம் |
| | | | | 4. Glocal Fair (ஜயகமு ஸ்ரீ லங்கா) நிகழ்ச்சித்திட்டத்திற்கு கடைகள் பெற்றுக் கொள்ளுதல். |
| | | | | 5. “விகமனிக ஹரசர” நிகழ்ச்சித் திட்டத்தை நடாத்துதல். |

| | | | | |
|---|---|---|---|---|
| 8. | தேசிய சேமிப்பு வங்கி | 2025.11.19 மற்றும் 2025.11.26 | 2026.02.19 PS 476 | 1. பிம்புத் பினான்ஸ் பிஎல்சி (Bimputh Finance PLC) நிறுவனத்திற்கு கடன் வழங்குதல். |
| | | | | 2. ஆட்கள் இரண்டு பேருக்கு 2020 டிசம்பர் 23ஆம் திகதி வழங்கப்பட்டுள்ள ரூ.மி. 164.73 ஆன கூட்டாதனக் கடன். |
| | | | | 3. கடன் தகவல் பணியக அறிக்கையில் குறிப்பிடப் பட்டுள்ள கடன் வசதிகள் 10 இன் முறையற்ற மீளச் செலுத்தலைக் கவனத்தில் கொள்ளாது கடன் வாடிக்கையாளர் ஒருவருக்கு ரூ.மி. 12.6 ஆன கடன் தொகை வழங்கப்பட்டமை. |
| | | | | 4. RPI Private Limited எனும் மாலைத்தீவு கம்பனிக்கு வங்கியினால் வழங்கப்பட்டுள்ள 9 மில்லியன்கள் பெறுமதியான ஐக்கிய அமெரிக்க டொலர் கூட்டுக்கடன். (Syndicate Loan) |

*6.

இருப்பாட்சியாளர்களைப் பாதுகாத்தல் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*7.

வாடகை (நீக்கல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*8.

தண்டனைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2025 செப்தெம்பர் 24) [1].

*9.

தொலைத்தொடர்பு அறவீடு (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*10.

நிதி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*11.

பட்டலந்த வீடமைப்புத் திட்டத்தில் உள்ள சித்திரவதைக்கூடங்கள், சட்டரீதியற்ற தடுப்பு நிலையங்களை நிறுவுதல், பராமரித்தல் ஆகியவற்றை விசாரணை செய்த ஆணைக்குழுவின் அறிக்கை,— விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2025 ஏப்ரல் 10 ),— "2025 மார்ச் 14 ஆம் திகதியன்று பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட பட்டலந்த வீடமைப்புத் திட்டத்தில் உள்ள சித்திரவதைக்கூடங்கள், சட்டரீதியற்ற தடுப்பு நிலையங்களை நிறுவுதல், பராமரித்தல் ஆகியவற்றை விசாரணை செய்த ஆணைக்குழுவின் அறிக்கை பாராளுமன்றத்தினால் பரிசீலனை செய்யப்படுமாக." எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

12.

மாகாண சபைத் தேர்தல்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

13.

இலங்கை வசதிகள் முகாமைத்துவ நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

14.

காணி அபிவிருத்தி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

15.

கோதாகொட குணரதன நாஹிமி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* **அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.**

---

[1] "சட்டமூலம் இப்பொழுது இரண்டாம் முறையாக மதிப்பிடப்பெறுமாக" எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

---

# எழுத்துமூல விடைக்கான வினாக்கள்

1.

2117/2026

கௌரவ ரவி கருணாநாயக்க, — நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 'ஜய இசுர' நிகழ்ச்சித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து அதன் கீழ் அங்கீகரிக்கப்பட்ட கடன்களின் எண்ணிக்கை மற்றும் மொத்தப் பெறுமதி யாதென்பதையும்;

(ii) 4%-5% சலுகை வட்டி மானியம் செலுத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) அவ்வாறாயின், இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் ஊடாக நன்மை பெற்றுக்கொண்ட பயனாளிகளின் எண்ணிக்கை மற்றும் நன்மைகள் யாவை என்பதையும்;

(iv) பங்குபற்றுகின்ற வர்த்தக வங்கிகள் இந்த நிகழ்ச்சித்திட்டத்துடன் இணங்கிச் செயற்பட்டனவா என்பதையும், அமைச்சிலிருந்து பெறப்படவேண்டிய உரிய வட்டி மானியத்தைப் பெற்றுக்கொண்டனவா என்பதையும்;

(v) ஏனைய வர்த்தக வங்கிகள் ஊடாகத் தமது கடன்களைச் செலுத்தி முடித்த கடனாளிகள் தொடர்ந்தும் இந்த மானியத்தைப் பெறுவதற்குத் தகைமையுடையோராயிருந்தார்களா என்பதையும்;

(vi) அவ்வாறாயின், அது வழங்கப்பட்டதா என்பதையும்;

(vii) இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் குறிக்கோள்களுக்கும், இலக்கு வைக்கப்பட்ட பயனாளிகளால் பெற்றுக்கொள்ளப்பட்ட நன்மைகளுக்கும் இடையே ஏதேனும் வேறுபாடுகள் இருப்பதை அவர் அறிவாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 2019 ஏப்ரல் மற்றும் நவம்பர் மாதங்களுக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் சம்பத் வங்கி ஊடாக அங்கீகாரங்கள் வழங்கப்பட்டனவா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், அவற்றின் எண்ணிக்கை மற்றும் பெறுமதி யாதென்பதையும்;

(iii) வரையறுக்கப்பட்ட க்ளென்றொக் (பிறைவற்) லிமிட். நிறுவனத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பத்தின் நிலை மற்றும், அது அங்கீகரிக்கப்பட்டிருப்பின், அதற்குரிய நன்மைகளை வழங்காமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்?

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2.

2119/2026

கௌரவ அஜித் பி. பெரேரா,— பிரதம அமைச்சரும், கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அரசியலமைப்பினால் எல்லை நிர்ணய ஆணைக்குழுவுக்கு ஒப்படைக்கப் பட்டுள்ள பொறுப்புகள் யாவை என்பதையும்;

(ii) 2015 ஆம் ஆண்டு முதல் 2025 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியினுள் மேற்படி ஆணைக்குழுவின் உறுப்பினர்களாகப் பணியாற்றிய நபர்கள் யாவர் என்பதையும்;

(iii) மேற்படி காலப்பகுதியினுள் ஆணைக்குழு ஆற்றிய பணிகள் யாவை என்பதையும்;

(iv) மேற்படி காலப்பகுதியினுள் ஆணைக்குழுவின் உறுப்பினர்களின் சம்பளங்கள், படிகள், வசதிகள் மற்றும் அலுவலக வாடகைக்காகச் செலவிடப்பட்ட மொத்தத் தொகை ஆகிய விபரங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) ஆணைக்குழுவில் பணியில் ஈடுபட்டுள்ள ஊழியர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) மேற்படி எண்ணிக்கை, ஒவ்வொரு பதவிவாரியாக வெவ்வேறாக யாது என்பதையும்;

(iii) 2015 ஆம் ஆண்டு முதல் 2025 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் ஊழியர்களின் சம்பளங்களுக்காக செலவிடப்பட்டுள்ள தொகை யாது என்பதையும்;

(iv) மேற்படி ஆணைக்குழுவை ஒரு நிரந்தர ஆணைக்குழுவாக முன்னெடுத்துச் செல்வதற்கான தேவை யாது என்பதையும்;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3.

2120/2026

கௌரவ அஜித் பி. பெரேரா,— நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) உயர்நீதிமன்ற நீதிபதிகளின் ஓய்வுபெறுவதற்கான வயதை 65 இலிருந்து 67 வரையும், மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகளின் ஓய்வு பெறுவதற்கான வயதை 63 இலிருந்து 65 வரையும் நீடிப்பதற்கு அரசாங்கம் கொள்கைத் தீர்மானமொன்றை மேற்கொண்டுள்ளதா;

(ii) ஆமெனில், அதற்கான அரசியலமைப்புத் திருத்தச் சட்டமூலமொன்றைத் தயாரிப்பதற்கு அமைச்சரவையினால் கொள்கைசார் அனுமதி வழங்கப்பட்டுள்ளதா;

(iii) அமைச்சர் அல்லது அமைச்சின் செயலாளர், அவ்வாறான சட்டமூலமொன்றைத் தயாரிப்பதற்கு சட்டவரைஞர் திணைக்களத்திற்கு அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளாரா;

(iv) உயர்நீதிமன்ற நீதிபதிகளின் ஓய்வுபெறுவதற்கான வயதை நீடிப்பதை நியாயப்படுத்துவதற்கு அடிப்படையாக அமைந்த விடயங்கள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?